இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 297– திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 24 – புதன்கிழமை 07 ஜூன் 2023 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:81 - Issue 297:Thiruvalluvar Year - 2054 - Vaikasi 24 - Wednesday 07 June 2023 - Trichy ★★ 8 Pages ₹5.00

## சிறுபான்மைச் சமுதாயத்தினரின் உரிமைகளுக்கு

# உரக்கக் குரல் எழுப்பியவர் கண்ணியமிகு காயிதே மில்லத்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.6.2023) கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 128–வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மலர்ப் போர்வை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜூன் 7 -**

**சிறுபான்மைச் சமுதாயத்தினரின் உரிமைகளுக்காக உரக்கக் குரல் எழுப்பிய அரிமா; மாசற்ற மாணிக்கம் கண்ணியமிகு காயிதே மில்லத் என்று அவரது 128வது பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

தமிழ்நாட்டின் மதிப்பு மிக்கத் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். காயிதே மில்லத் என்கிற உருதுச் சொல்லுக்கு வழி காட்டும் தலைவர் என்று பொருள் கொள்ளப்படும்.

அத்தகையவரின் இயற்பெயர் முகமது இஸ்மாயில் ஆகும். 1896ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் தேதி திருநெல்வேலி பேட்டை மியாகான் ராவுத்தரின் மகனாகப் பிறந்தவர். இளம் வயதில் துணிகள் விற்கும் வணிகராகவும், மவுலவி என்று சொல்லப்படும் மதத் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

பின்னாளில் காந்தி அடிகளாரின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்ற உறுப்பினராகவும் காயிதே மில்லத் அவர்கள் பணியாற்றியுள்ளார்.

நீண்ட நாட்கள் முஸ்லிம் லீக் கட்சித் தலைவராக இருந்த காயிதே மில்லத் அவர்கள், அகில இந்தியத் தலைவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டவர். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்டோரால் பெரிதும் பாராட்டப்பட்டவராகும்.

நாடாளுமன்ற உறுப்பினராக மூன்று முறை பணியாற்றிய கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் அரசியலில் மட்டுமின்றி தொழில் துறையிலும் சிறந்து விளங்கினார்.

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம், சென்னை வர்த்தகத்துறை, தென்னக ரயில்வே ஆலோசனைக் குழு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கவுன்சில், தொழில் திட்டக்குழு, சுங்கவரிக் கழகம், தென்னிந்திய தொழில் வர்த்தகச் சபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் உறுப்பினர் என்கிற நிலையில் பணியாற்றி உள்ளார். கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள்.

இந்தித் திணிப்பை கடுமையாக எதிர்த்தவர், மாநில மொழிகளின் உரிமைகளுக்காகவும், மாநில உரிமைகளுக்காகவும் போராடிய காயிதே மில்லத் அவர்கள் மத நல்லிணக்கத்திற்கு தம் வாழ்நாளை அர்ப்பணித்த நிலையில் 1972 ஏப்ரல் 4ஆம் தேதி நள்ளிரவு இயற்கை எய்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் போர்வை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்துவார். அந்த வழியில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாளையொட்டி அவரது நினைவிடத்தில் மலர் போர்வை போர்த்தி மலரஞ்சலி செலுத்தினார்.

அதையடுத்து அவருக்கு புகழாரம் சூட்டும் வகையில் தமது சமூக வலைதளப் பக்கத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கருத்தை பதிவிட்டார்.

**சமூக வலைதளப் பதிவு!**

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 128வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் நினைவிடத்தில் மலர் போர்வை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திய பின்னர் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

**கல்லூரிப் படிப்பைக் கைவிட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைசிறந்த நாட்டுப்பற்றாளர்.**

**ஆட்சிமொழிப் பிரச்சினையில், தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என அரசியல் நிர்ணய அவையில் ஆணித்தரமாக வாதாடிய மொழிக் காவலர்.**

**தொகுதிக்குச் செல்லாமலேயே போட்டியிட்ட தேர்தல்களில் எல்லாம் வெற்றிபெறக் கூடிய அளவுக்குச் செல்வாக்கு கொண்டிருந்த தனிப்பெரும் தலைவர்.**

**அரசியல் நிர்ணய அவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் தமிழர்களுக்காகவும் சிறுபான்மைச் சமுதாயத்தினரின் உரிமைகளுக்காகவும் உரக்கக் குரல் எழுப்பிய அரிமா.**

**"இவ்வளவு பெரிய முஸ்லிம் சமுதாயத்திற்கு இம்மாதிரி ஒரு தலைவர் மீண்டும் கிடைப்பது அரிது" என்று அவரது மறைவின்போது தந்தை பெரியாரால் உருக்கத்துடன் பாராட்டப்பட்ட மாசற்ற மாணிக்கம் கண்ணியமிகு 'காயிதே மில்லத்' முகம்மது இஸ்மாயில் அவர்களின் பிறந்தநாளில் இந்நாட்டுக்காக அவர் ஆற்றிய ஒப்பற்ற பங்களிப்புகளை நினைவு கூர்ந்து போற்றுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஒடிசா ரெயில் விபத்துக்கு பொறுப்பேற்று

# ரெயில்வே அமைச்சர் பதவி விலக வேண்டும்!

## காங்கிரஸ் கட்சி கண்டிப்பு!

புதுடெல்லி, ஜூன் 6 -

ஒடிசா ரெயில் விபத்துக்கு பொறுப்பேற்று ரெயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் பதவி விலக வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி கண்டிப்புடன் கூறி உள்ளது.

**மனிதர்களால் உருவாக்கப்பட்டது!**

ஒடிசாவில் நடந்துள்ள கோர ரெயில் விபத்து தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் விளம்பரம், ஊடகங்கள் துறை தலைவர் பவன் கெராவும், சக்திசிங் கோஹில் எம்.பி.யும் டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது:

ஒடிசா ரெயில் விபத்து முழுமையான அலட்சியம், அமைப்பில் உள்ள குளறுபடிகள், திறமையின்மை, நாசிச உணர்வு ஆகியவற்றால் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவு ஆகும்.

இதில் தவறு செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் மோடி கூறி உள்ளார். அவர் முதலில் இதை ரெயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவுடன் தொடங்க வேண்டும்.

விபத்துக்கு பொறுப்பேற்று எந்தவித ஐயமும் இன்றி ரெயில்வே மந்திரி அஷ்வினி வைஷ்ணவ் பதவி விலக வேண்டும்.

அஷ்வினி வைஷ்ணவின் மிதமிஞ்சிய விளம்பரம், நாடகத்தனமான செயல்கள், மக்கள் தொடர்பு வித்தைகள் ஆகியவை ரெயில்வேயின் மிகத்தீவிரமான குறைபாடுகள், குற்ற அலட்சியம், இந்திய ரெயில்வேயின் பாதுகாப்பு பற்றிய முழுமையான அலட்சியம் ஆகியவற்றை மறைத்து விட்டன.

**'பிரதமர் பொறுப்பேற்க வேண்டும்'**

'வந்தே பாரத்' ரெயில்களைப் பச்சைக்கொடி காட்டி தொடங்கி 'வைக்கிற பொறுப்பை பிரதமர் மோடி தான் ஏற்றிருக்கிறார். எனவே இந்திய ரெயில்வேயின் பல்வேறு குறைகளுக்கு மத்தியிலும் அது நன்றாகத் தான் இருக்கிறது என்று காட்டி வந்ததற்கு பிரதமர் மோடி பொறுப்பேற்க வேண்டும்.

**'கவாச்' அமைப்பு**

இந்திய தலைமை கணக்கு தணிக்கையர், நாடாளுமன்ற நிலைக் குழுக்கள், நிபுணர்கள் என பல தரப்பினரின் எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் ரெயில்வே பாதுகாப்பை மேம்படுத்தமோடி அரசு ஏன் செலவு செய்யவில்லை? சுதந்திர இந்தியாவின் மிக மோசமான இந்த விபத்துக்கு பொறுப்பு ஏற்கப்போவது யார்? நாடு முழுவதும் 'ரெயில் விபத்து' தடுப்பு 'கவாச்' அமைப்பை நிறுவப்போவது எப்போது?

இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கவியரங்கம் - கட்டுரை - பேச்சு - வினாடி வினா - விளையாட்டுப் போட்டிகள் - ஆய்வரங்கம் - பொதுக்கூட்டங்கள்!

# கலைஞரை வருங்கால தலைமுறையினர் நினைவுகொள்ளும் வகையில் ஓராண்டு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா குழு கலந்துரையாடல் கூட்டத்தில் தீர்மானம்!

**சென்னை, ஜூன் 7 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா குழு கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் முதல்வர் அவர்களின் முகாம் இல்லத்தில் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வருங்கால தலைமுறையினர் நினைவு கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும், உணர்ச்சியோடும் எங்கெங்கு நடத்திடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் திருவாரூர் கலைஞர் கோட்டம் வரை கலைஞர் சுடர் ஓட்டம், கவியரங்கம், பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா, விளையாட்டுப் போட்டிகள், கவியரங்கங்கள் - பொதுக்கூட்டங்கள் என்று 34 வகையான நிகழ்ச்சிகளை இந்த ஓர் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.**

இது பற்றிய விவரம் வருமாறு :-

"நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர்" அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலன் திட்டங்களையும் ஓராண்டு முழுவதும் எடுத்துரைத்தாலும் முழுமையடையாது என்றாலும், தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் அவரை என்றென்றும் நினைவில் கொள்ளும் வகையில் நூற்றாண்டு விழாவினை எழுச்சியோடும் உணர்ச்சியோடும் எங்கெங்கும் நடத்திட உரிய ஆலோசனைகளை மாவட்ட நிர்வாகத்துக்கு வழங்கிட தலைமைக் கழகத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் குழு"வின் கலந்துரையால் கூட்டம் நேற்று முன்தினம் (5.6.2023), காலை, சென்னை, ஆழ்வார் பேட்டை, கழகத் தலைவர் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. இதில், ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., ஆர்.எஸ். பாரதி முன்னாள் எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன் முன்னாள் எம்.பி., ஆகியோர் கலந்து கொண்டனர். அதுபோது கழகத் தலைவர் அவர்களுடன், பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் உடனிருந்தார்.

இக்கூட்டத்தில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை பின்வரும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக அமைந்திடவேண்டுமெனதீர்மானிக்கப்பட்டது.

**1)மாணவர்களிடையே "வினாடி வினா" போட்டிகள்:** இப்போட்டிகளில் பங்கு பெறுவோர் அதற்கான செயலியில் (App) தங்கள் பெயரை பதிவு செய்திட வேண்டும்.

முதல் கட்டம்: மாவட்ட வாரியான போட்டிகள்

இரண்டாவது கட்டம் : மண்டல வாரியான போட்டிகள்

மூன்றாவது கட்டம் : மாநில அளவிலான போட்டிகள்

**2) கவியரங்கம், கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி**

**3) கலை இரவு (தலைவர் கலைஞர் சார்ந்த கலை நிகழ்ச்சிகள்)**

**4) 'கலைஞர் சுடர்' ஏந்தி, கலைஞர் கோட்டம் வரை தொடர் ஓட்டம்**

**5) மாவட்ட வாரியாக 'மாரத்தான் தொடர் ஓட்டம்'**

**6) மாவட்ட வாரியாக விளையாட்டுப் போட்டிகள்.**

**7) கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் ஒப்பித்தல்.**




**8) தலைவர் கலைஞர் குறித்த நிகழ்வுகளையும் தகவல்களையும் சமூக வலைதளங்களில் Reels தயாரித்து ஆண்டு முழுவதும் வெளியிடுதல்.**

**9) தொழிற் சங்கத்தின் சார்பில் நிகழ்ச்சிகள்**

**10) சட்டத்துறை சார்பில் பேச்சுப் போட்டிகள்**

தலைப்புகள் : 'மாநில சுயாட்சி', 'அரசியல் சட்ட மாண்புகளை காப்போம்'

**11) மகளிர் அணியின் சார்பில் "Podcast".**

**12) கழகச் சொற்பொழிவாளர்களைக் கொண்டு கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம்**

13) Symposium in English (ஆங்கில கருத்தரங்கங்கள்)

**14) கூட்டணிக் கட்சி சொற்பொழிவாளர்களை கொண்டு, மாவட்ட அளவில் "கருத்தரங்கங்கள்".**

**சொல்லரங்கம்**

**15) தலைவர் கலைஞர் அவர்களின் இலக்கியங்கள் குறித்து தமிழறிஞர்கள் கலந்து கொள்ளும் "ஆய்வரங்கங்கள்".**

**16) கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவின்போது திரைத் துறைக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் "கலை நிகழ்ச்சி".**

**17) திருநங்கைகள் மாற்றுத் திறனாளிகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்.**

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்